# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெள்ளிகிழமை 14ம் நாள் சாட்சியாகிய ஞானவேலு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானவேலு | வயது | 53 |
| த/பெ. | சுப்பிரமணியன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**STC.No.658/2022**

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் . எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை 14.03.2025 பு.சா.1</u>**

1. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது வீட்டிற்குள் நுழைந்து பிரச்சனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் எதிரி பிரச்சனை செய்தார் என்றால் 29.08.2021 ம் தேதி. என்ன பிரச்சனை செய்தார் என்றால் எனது வீட்டிற்குள் அத்துமீறி வந்து வீட்டைவிட்டு வெளியே போக மாட்டேன் என்று சண்டையிட்டார்.

2. எதிரியை வீட்டிலிருந்து அப்புறப்படுத்த இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி பிரச்சனைக்குரிய வீட்டில் எத்தனை வருடம் வசித்து வந்தார் என்றால் திருமணத்திற்கு பிறகு 3 வருடங்கள் வசித்து வந்தார். தற்போது எதிரி எந்த வீட்டில் வசித்து வருகிறார் என்றால் நான் வசித்து வந்த வீட்டில்தான் வசித்து வருகிறார். நான் தற்போது எந்த விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றால் செங்கல்பட்டில் உள்ள எனது அக்கா வீட்டில் வசித்து வருகிறேன்.

3. 2022 ம் வருடம் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது எந்த இடத்தில் வசித்து வந்தேன் என்றால் செங்கல்பட்டில் உள்ள எனது அக்கா வீட்டில் இருந்துதான் வழக்கை தாக்கல் செய்தேன். நான் இந்த வழக்கில் அரக்கோணம் திருவள்ளுவர் தெரு விலாசத்தை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதன்மை சாட்சியத்தில்

என்னை, எதிரி தனது மகன்களுடன் 29.08.2021 ம் தேதி வந்து என்னை தாக்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை.

4. எத்தனை மணிக்கு எதிரி தனது 2 மகன்களுடன் வந்தார் என்றால் மதியம் 2 மணி. எத்தனை பேர் வந்து சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் பெயர் ஞாபகம் இல்லை. எந்த போலீசார் வந்து எதிரியை எச்சரித்தார்கள் என்றால் அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் இருந்து முனியப்பன் என்ற காவலர் வந்தார். எனது முதன்மை சாட்சியத்தில் 30.08.2021 ம் தேதி காலை 10 மணிக்கு புகார் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 29 ம் தேதி புகார் கொடுத்தேன்.

5. என்னையும், எதிரியையும் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால், என்னை மட்டும் விசாரணை செய்தார்கள். எதிரியை வீட்டில் விசாரணை செய்ததாக சொன்னார்கள். எனது முதன்மை சாட்சியத்தில் எதிரியை வீட்டில் விசாரணை செய்ததாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு அரக்கோணம் வள்ளலார் தெருவில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். நான் அந்த வீட்டில்தான் தற்போது வசித்து வருகிறேன் என்றால் இல்லை.

6. நான் சம்பவத்திற்கு முன்பு திருவள்ளுவர் தெருவில் உள்ள வீட்டில் வசித்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது விவாகரத்து உத்தரவில் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் இருப்பிடச் சான்றிதழ் யார் பெயரில் உள்ளது என்றால் மேற்படி ஆவணம் விவாகரத்து வழக்கிற்கு முந்தைய தேதியிட்டது. எனக்கும், எதிரிக்கும் எந்த தேதியில் விவாகரத்து உத்தரவு வழங்கப்பட்டது என்றால் 12.06.2012.

7. எனது மகன்களுக்கு எந்த விலாசத்தில் ஆதார் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

(எதிரி வழக்கறிஞர் வேண்டுகோளுக்குகிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Sd/-K.ramkumar.,M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.